# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 18.06.2026

அசல் வழக்கு எண்.276/2020

பி.சா.1 – செல்வகுமார் த/பெ. பச்சையப்ப முதலியார் என்பவரை வாதி தரப்பில் குறுக்கு

விசாரணை தொடர்ச்சி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

4. தாவா சொத்து எனது தந்தை எனது தாயாருக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் படியாக கிடைத்தது சம்மந்தமான உயில் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் உயில் படியாக எனது தாயாருக்கு தாவா சொத்து கிடைத்ததாக சொல்கிறேன் என்றால் மேற்படி உயில் ஆவணம் அ.வ.எண்.3/2005 ல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் உயில் ஆவணம் பற்றி நீதிமன்றத்தில் தீர்வு செய்யப்பட்டுள்ளது என்றால் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பில் உயில் ஆவணம்படியாக எனக்கும் எனது அண்ணனுக்கும் தாவா சொத்தில் பாத்தியம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு சொல்லப்படவில்லை. எனது தாயாருக்குதான் முழு உரிமையானது என்று சொல்லியுள்ளார்கள். உயிலில் சொல்லப்படாத சொத்துக்களை தான் பிரித்துக் கொள்ளுமாறு சொல்லப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11ல் என் ஜீவ திசைக்கு பிறகும், எனது மனைவி பார்வதியம்மாள் ஜீவ திசைக்கு பிறகும் என் இரு குமாரர்களும் சேர்ந்து என் மூத்த குமாரத்திக்கு ரூ.50,000/- மட்டும் கொடுத்துவிட்டு சரிசமமாக அடைந்து கொண்டு புத்திர பவுத்திர பாரம்பரியமாய் தானாதி, வினிமய விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்து

கொள்ளவேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் என் ஜீவ காலத்திற்கு பிறகு என் மனைவி பார்வதியம்மாள் உயிருடன் இருந்தால் அவர் எனது பூரா ஸ்தாரார ஜங்கம சொத்துக்களை மற்றவர்களுக்கு சம்மந்தமில்லாமல் சர்வ சுதந்திரங்களுடன் கைப்பற்றி தானாதி வினிமய விக்கிரையங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்து கொள்ளவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பில் மேற்படி உயிலானது என் ஜீவ திசைக்கு பிறகும், எனது மனைவி பார்வதியம்மாள் ஜீவ திசைக்கு பிறகும் என் இரு குமாரர்களும் சேர்ந்து என் மூத்த குமாரத்திக்கு ரூ.50,000/- மட்டும் கொடுத்துவிட்டு சரிசமமாக அடைந்து கொண்டு புத்திர பவுத்திர பாரம்பரியமாய் தானாதி, வினிமய விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டு அனுபவித்து கொள்ளவேண்டியது என்ற விவரம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தீர்ப்புக்கு மேலாக நான் மேல்முறையீடு செய்துள்ளேன். மேற்படி தீர்ப்புக் காலத்தில் எனது தாயார் என்னுடன்தான் இருந்தார். அப்போது எனது தாயாருக்கு என்ன வயது என்றால் 78 வயது. மேற்படி வழக்கு தீர்ப்புக்கு பின்னர் எனது தாயாரிடமிருந்து நான் தான செட்டில்மெண்ட் 30.11.2017 தேதியில் எழுதி வாங்கியுள்ளேன் என்று சொன்னால் எனது தாயார்தான் எனக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் மேற்படி வழக்கின் தீர்ப்புக்கு எதிராக பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனது தாயாரிடம்தான் கேட்க வேண்டும். எனது செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்படி வழக்கு தீர்ப்பு பற்றி மற்றும் இடைக்கால தடை உத்தரவு பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் தான செட்டில்மெண்ட்

ஆவணம் எழுதி ஒரு வாரத்திற்கு பின்னர்தான் அது பற்றி எனக்கு தெரியும்.

5. மேற்படி வழக்கு  தீர்ப்பு படியாக எனது தாயாருக்கு எனக்கு தான செட்டில்மெண்ட் எழுத உரிமை இல்லை என்று சொன்னால் உயில்படியாக அவருக்கு உரிமை உள்ளதாக ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். மேலும் வழக்குகள் நிலுவையில் உள்ளபோது மேற்படி தான செட்டில்மெண்ட் எழுதி உள்ளதால் மேற்படி ஆவணம் lispendens படியாக செல்லத்தக்க ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் எனக்கு எழுதி வைத்துள்ள தான செட்டில்மெண்ட் சட்டப்படியாக செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தான ஆவணமானது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் மேற்படி ஆவணம் அமலுக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணம் அமலுக்கு வந்து நான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன். நான் எனது தாயார் எழுதி வைத்த செட்டில் மெண்ட் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. நான் நடைமுறைக்கு வராத செட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து எனது மகன் நவீன் குமார் என்பவருக்கு வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தினை எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்து அதன்படியாக ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளனே். வா.சா.ஆ.5 வழக்கு நிலுவையில் உள்ளபோது தடையுத்தரவை மீறி எழுதப்பட்டுள்ளது என்றும் அதனால் மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அது குடும்ப ஏற்பாட்டு ஆவணமாகும். மேற்படி ஆவணத்தில் ஏற்கனவே தீர்ப்பான விவரம் மற்றும் நிலுவை வழக்குகள் பற்றி குறிப்பிடவில்லை

என்று சொன்னால் சரிதான். எனது தாயார் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுக்க உரிமை இல்லாத நிலையில் எனது தாயார் செட்டில்மெண்ட்டு ஆவணம்படியாக நான் எனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்க உரிமை இல்லை என்றும் மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் lispendens படியாக செல்லத்தக்க ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

6.நான் எனது மகனும் தாவா சொத்தில் மேற்படி ஆவணங்கள் படியாக முழு உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. முன் தீர்ப்பு படியாக வாதிகளுக்கு தாவா சொத்தில் 1/3 பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அது பற்றி மேல் முறையீடு வழக்கு நிலுவையில் உள்ளது. எனது மகன் நவீன் குமார் தாவா சொத்தினை வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.8ன் படியாக 4ம் பிரதிவாதி வங்கியில் அடமானம் வைத்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அடமானம் படியாக வங்கியிடமிருந்து 45 லட்சம் கடன் பெற்றுள்ளார் என்றால் கடன் பெற்று கடன் தொகை பைசல் செய்யப்பட்டுவிட்டது. கடன் பைசல் சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு அவசியம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.6 முதல் 8 அடமான கடன்களை எனது மகன் மோசடியாக வாதியின் பாகத்தை மறைத்து பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதுபற்றி வங்கி தரப்பில்தான் கேட்க வேண்டும். தாவா சொத்து சம்மந்தமான கடன்கள் வாதியின் 1/3 பாகத்தை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் வாதிக்கு பாக உரிமை கிடையாது. எனது தாயார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் நான் எனது மகனுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட்

ஆவணம் அதன் தொடர்ச்சியான அடமான ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

7. இவ்வழக்கில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பதிலுரையில் எனது தாயார் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் நான் எனது மகனுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம், எனது மகன் வங்கியில் ஏற்படுத்திய அடமான ஆவணங்கள் பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் எல்லா விவரங்களையும் பதிலுரையில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. வாதியின் பாகத்தை ஏமாற்றும் நோக்கில் எனக்கு எனது தாயார் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், நான் எனது மகனுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றும், மற்றும் எனது மகன் வங்கிக்கு அடமான பத்திரங்கள் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதனால் மேற்படி ஆவணங்கள் செல்லாது என்று வாதி இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதியின் பாகத்தை மறைத்து பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

Type written by the Gr-II Bench Clerk in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Additional Subordinate Judge,
Kancheepuram